₹10 லட்சம் கொடுத்தால் ₹13 லட்சம் தருவதாக கூறி

வெற்றுத்தாள்களை தந்து பணம் மோசடி அமமுக பிரமுகர் உள்பட 2 பேர் கைது

நல்லம்பள்ளி, ஆக. 3-

நல்லம்பள்ளி அருகே, ₹10 லட்சம் கொடுத்தால், ₹13 லட்சத்திற்கு 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் தருவதாக கூறி, வெற்றுத்தாள்களை தந்து டிராவல்ஸ் ஓனரிடம் பண மோசடியில் ஈடுபட்ட அமமுக பிரமுகர் உள்பட 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே ராமியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் சுரேஷ்(31). இவர் டிராவல்ஸ் நடத்தி வருகிறார். இந்நிலையில், சுரேஷை செல்போனில் தொடர்பு கொண்ட ஒரு கும்பல், ₹10 லட்சம் 500 ரூபாய் நோட்டுகள் கொடுத்தால், ₹13 லட்சத்திற்கு ₹2 ஆயிரம் நோட்டுகள் கொடுப்பதாக கூறினர். அதை நம்பிய சுரேஷ், சம்மந்தப்பட்ட கும்பல் கூறியபடி, தர்மபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வாரச்சந்தை அருகே உள்ள ஒரு பேக்கரி முன்பு ₹10 லட்சத்துடன் நேற்று முன்தினம் மாலை நின்றிருந்தார். சிறிது நேரத்தில் அங்கு காரில் வந்த 4 பேர் கும்பல், சுரேஷிடம் ₹10 லட்சத்தை வாங்கிக் கொண்டு, ₹13 லட்சம் இருப்பதாக கூறி ஒரு பையை கொடுத்து விட்டு அங்கிருந்து உடனே காரில் புறப்பட்டு சென்றனர்.

அதன் பின்னர், சிறிது தூரம் சென்ற பிறகு, சுரேஷ் பையை திறந்து பார்த்த போது, அதில் ரூபாய் நோட்டு கட்டுகளின் மேலே, ஒரே ஒரு 2 ஆயிரம் ரூபாய் நோட்டும், அதன் உள்ளே வெற்று பேப்பர்களும் இருந்தது கண்டு அதிர்ச்சியடைந்தார். முன்னதாக, அவர் எதற்கும் தேவைப்படும் என்ற நோக்கத்தில் காரில் வந்த கும்பலை, அவர்களுக்கு தெரியாமல் தனது செல்போனில் ரகசியமாக படம் பிடித்து வைத்திருந்தார். அதனை கொண்டு, அதியமான் கோட்டை போலீசில் உடனடியாக புகார் அளித்தார். அதன் பேரில் வழக்குப் பதிவு செய்த போலீசார், தனிப்படை அமைத்து விசாரணை மேற்கொண்டனர்.

இதனிடையே, சுரேஷிடம் பணம் மோசடியில் ஈடுபட்டது தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் அருகே உள்ள சீலநாயக்கனூர் பகுதியைச் சேர்ந்த அமமுக பிரமுகரான கிருஷ்ணமூர்த்தி(35), கோபாலம்பட்டி நடுரைச் சேர்ந்த ராஜேந்திரன்(45) என்பது தெரியவந்தது. இதையடுத்து, இருவரையும் கைது செய்த போலீசார், அவர்களிடமிருந்து ₹3 லட்சம் ரொக்கத்தை பறிமுதல் செய்தனர். மேலும், தலைமறைவாக உள்ள அவர்களது கூட்டாளிகள் 2 பேரை தேடி வருகின்றனர்.



விழுப்புரம் கீழ்பெரும்பாக்கம் திரவுபதி அம்மன் கோயில். உள்படம்: மர்ம நபர்களால் உடைக்கப்பட்ட உண்டியல்.

விழுப்புரம் திரவுபதி அம்மன் கோயில்

உண்டியலை உடைத்து பணம் திருட்டு

போலீசார் விசாரணை – பரபரப்பு

விழுப்புரம், ஆக. 3-

விழுப்புரம் கீழ்பெரும் பாக்கம் பகுதியில் திரவுபதி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த கோயில் 450 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. கடந்த பங்குனி மாதம் தீமிதி விழா நடைபெற்று முடிந்துள்ள நிலையில், நேற்றிரவு கோயில் பின்புறம் மதில் சுவர் ஏறி உள்ளே நுழைந்த மர்மநபர்கள், கோயிலில் சீல் வைக்கப்பட்ட உண்டியலின் 2 பூட்டை உடைத்து, அதிலிருந்த காணிக்கை பணம் மற்றும் நகை ஆகியவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இன்று காலை கோயில் பூசாரி விஜயன்(55), கோயிலை திறக்கும்போது உண்டியல் உடைக்கப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தார். இதுகுறித்து உடனடியாக இந்து அறநிலையத்துறைக்கும், காவல் துறைக்கும் தகவல் தெரிவித்துள்ளார். உண்டியலில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்திய பணம் சுமார் ரூ.10 ஆயிரம் இருக்கலாம் என தெரிகிறது.

தகவலறிந்த விழுப்புரம் நகர போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து உடைக்கப்பட்ட உண்டிய லில் இருந்து கைரேகை சேகரித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஸ்டுடியோ உரிமையாளர் மீது

மிளகாய் பொடியை தூவி ₹6 லட்சம் பறித்த தம்பதி

உதவி கேட்பதுபோல டூவீலரை நிறுத்தி கைவரிசை

போச்சம்பள்ளி, ஆக. 3-

போச்சம்பள்ளி அருகே, போட்டோ ஸ்டூடியோ உரிமையாளர் முகத்தில் மிளகாய் பொடி தூவி ₹6 லட்சத்தை பறித்து சென்ற தம்பதி குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த வலசைகவுண்டனூர் கிராமத்தைச் சேர்ந்தவர் கோபாலகிருஷ்ணன்(34). போட்டோ ஸ்டுடியோ வைத்துள்ளார். இவர் போச்சம்பள்ளி ஸ்டேட் பேங்கில் அடகு வைத்துள்ள நகைகளை மீட்பதற்காக, நேற்று தனது வீட்டிலிருந்து ₹6 லட்சம் பணத்தை எடுத்துக் கொண்டு, டூவீலரில் சென்று கொண்டிருந்தார். புளியம்பட்டி கிராமத்தின் அருகே சென்றபோது, எதிரே டூவீலரில் வந்து கொண்டிருந்த தம்பதிகள், உதவி கேட்பது போல் கையை நீட்டி நிறுத்தியுள்ளனர்.

அப்போது சற்றும் எதிர்பாராத நேரத்தில், பின்னால் இருந்த பெண், தனது கையில் வைத்திருந்த மிளகாய் பொடியை கோபாலகிருஷ்ணன் முகத்தில் தூவினார்.

இதில் கண்ணில் எரிச்சல் ஏற்பட்டு அவர் தவித்தபோது, டூவீலரில் வந்த தம்பதி, அவரை கீழே தள்ளிவிட்டு டூவீலர் டேங்க் கவரில் இருந்த ₹6 லட்சத்தை எடுத்துக் கொண்டு அங்கிருந்து தப்பியோடி விட்டனர். கண் எரிச்சல் தாங்காமல் அலறிய கோபாலகிருஷ்ணனின் சத்தத்தை கேட்டு, அருகில் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த 2 பேர் வந்து, அவருக்கு தண்ணீர் கொடுத்து உதவி செய்தனர். பின்னர், போச்சம்பள்ளி போலீஸ் ஸ்டேஷனில் கோபாலகிருஷ்ணன் புகார் அளித்தார். அதன்பேரில், பர்கூர் டிஎஸ்பி மனோகரன் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை நடத்தினர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்து 3 வயது பெண் குழந்தை மூழ்கி சாவு

தர்மபுரி, ஆக. 3-

தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் அருகே பூமாண்டஅள்ளி ஊராட்சி மொட்டையன் கொட்டாய் பகுதியை சேர்ந்தவர் விஜயகுமார். தொழிலாளியான இவரது மனைவி புனிதா. இவர்களுக்கு 3 வயதில் திவ்யா என்ற குழந்தை இருந்தது. நேற்று காலை அதேபகுதியில் உள்ள உறவினர் வீட்டில் திவ்யாவை விட்டு விட்டு கணவன், மனைவி இருவரும் வெளியே சென்றனர். வீட்டின் அருகே திவ்யா விளையாடிக்கொண்டிருந்தாள்.பின்னர் சிறிது நேரத்திலேயே குழந்தை மாயமானது.

இதனால் அதிர்ச்சியடைந்த விஜயகுமாரின் உறவினர்கள் குழந்தையை தேடினர். அப்போது வீட்டின் அருகேயுள்ள தண்ணீர் தொட்டியில் குழந்தை சடலமாக கிடப்பது தெரியவந்தது. இதுபற்றி காரிமங்கலம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் சம்பவ இடம் விரைந்து வந்த போலீசார் குழந்தையின் சடலத்தை கைப்பற்றி விசாரித்தனர். அதில், வீட்டின் அருகே விளையாடியபோது தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்து உயிரிழந்திருப்பது தெரியவந்தது. இதையடுத்து குழந்தையின் சடலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தொடர்ந்து வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

ஜனாதிபதி முர்மு 7ம் தேதி புதுவை வருகை

அதிகாரப்பூர்வ பயண விவரம் அறிவிப்பு

புதுச்சேரி, ஆக. 3-

ஜனாதிபதி திரவுபதி முர்மு 2 நாள் பயணமாக வருகிற 7ம் தேதி புதுச்சேரி வருகிறார். அவரது புதுவை வருகை தொடர்பான அதிகாரப்பூர்வ பயண விவரம் நேற்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, வரும் 7ம்தேதி காலை 9.55 மணிக்கு சென்னை பழைய விமான நிலையத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் புதுவைக்கு புறப்படுகிறார். 10.35க்கு லாஸ்பேட்டையில் உள்ள விமான நிலையத்திற்கு வந்து சேருகிறார். அங்கு கவர்னர், முதல்வர், அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் ஆகியோர் வரவேற்பு அளிக்கின்றனர். பின்னர், அங்கிருந்து புறப்பட்டு ஜிப்மர் மருத்துவமனை செல்கிறார். அங்கு காலை 11.05 முதல் 12.45 மணி வரை ஜிப்மரில் நடைபெறும் விழாவில் பங்கேற்கிறார். மதியம் 12.45 மணிக்கு விழா முடிந்ததும், புதுவை கடற்கரை சாலை அருகே உள்ள நீதிமன்ற பாரம்பரிய விருந்தினர் மாளிகைக்கு செல்கிறார். அங்கு மதிய உணவை முடித்துவிட்டு ஓய்வு எடுக்கிறார்.

அதன்பிறகு மாலை 4 மணிக்கு புறப்பட்டு மணக்குள விநாயகர் கோயிலுக்கு செல்கிறார். அங்கு சாமி தரிசனம் செய்தபிறகு, மாலை 4.40 மணிக்கு முருங்கப்பாக்கத்தில் உள்ள கைவினை கிராமத்திற்கு சென்று பார்வையிடுகிறார்.

அங்கிருந்து 5.45 மணிக்கு புறப்பட்டு திருக்காஞ்சி கங்கை வராத நதீஸ்வரர் கோயிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்கிறார். 6.10க்கு திருக்காஞ்சியில் இருந்து புறப்பட்டு மீண்டும் நீதிமன்ற பாரம்பரிய விருந்தினர் விடுதிக்கு வந்து ஓய்வு எடுக்கிறார். இரவு 8 மணிக்கு கவர்னர் மாளிகையில் குடியரசு தலைவருக்கு கவர்னர் தமிழிசை இரவு உணவு விருந்து அளிக்கிறார்.

இரவு உணவை முடித்த பிறகு பாரம்பரிய விருந்தினர் மாளிகையில் இரவு தங்குகிறார். 8ம்தேதி காலை 6 முதல் 6.45 மணி வரை கடற்கரை சாலையில் நடைபயிற்சி மேற்கொள்கிறார். 9.15 முதல் 9.45 மணி வரை குடியரசு தலைவரை பார்ப்பதற்காக அனுமதி பெற்ற முக்கிய நபர்களை சந்திக்கிறார்.

10.15க்கு விருந்தினர் மாளிகையில் இருந்து புறப்பட்டு அரவிந்தர் ஆசிரமம் செல்கிறார். 55 நிமிடம் ஆசிரமத்தில் இருந்துவிட்டு, 11.15 மணிக்கு புறப்பட்டு சாலை மார்க்கமாக காரில் ஆரோவில் மாத்ரி மந்திருக்கு சென்று பார்வையிடுகிறார். அங்கேயே மதிய உணவை முடித்து விட்டு 2.45 முதல் 4 மணி வரை ஆரோவில் நடைபெறும் நகர கண்காட்சி, கருத்தரங்கம், நிகழ்ச்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். மாலை 4 மணிக்கு நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு சாலை மார்க்கமாக காரில் புறப்பட்டு லாஸ்பேட்டை விமான நிலையத்துக்கு மாலை 4.15 மணிக்கு வந்தடைகிறார். மாலை 4.25 மணிக்கு அங்கிருந்து ஹெலிகாப்டரில் புறப்பட்டு சென்னை சென்றடைகிறார். குடியரசு தலைவரின் வருகையொட்டி புதுச்சேரியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

கூடங்குளம் போராட்ட வழக்கு

18 பேரின் சிறைத் தண்டனை நிறுத்தி வைப்பு

மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவு

நெல்லை, ஆக. 3-

நெல்லை மாவட்டம், கூடங்குளம் அணு உலைக்கு எதிராக இடிந்தகரை கடற்கரை கிராமத்தில் போராட்டம் நடந்தது. இந்த போராட்டத்துக்கு கடலில் மீன்பிடித்து விற்பனை செய்து வரும் பணத்தில் பங்கு கொடுப்பது தொடர்பாக இடிந்தகரையைச் சேர்ந்த இளங்கோ மற்றும் பிரைட்டன் ஆகிய இருவரையும் கொலை முயற்சி செய்ததாக இளங்கோ, பிரைட்டன் ஆகிய இருவரும் கூடங்குளம் போலீசில் புகார் அளித்தனர். இந்த புகாரின் பேரில் போலீசார் அதே பகுதியைச் சேர்ந்த ஜோதி, ரோசாரி, லூர்து மைக்கேல், போர்ஜின், அசாருதீன், ராபர்ட் சேகர், பிரவீன், ரமேஷ், கவுசானல், கௌதம், சீலன், சகாயம், ஞானபிரகாசி, ஆஷா, சிங், ரவி, ராணி, சூர்யா, போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் உதயகுமார், புஷ்பராயன், ஜேசுராஜன் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்தனர். வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் நடந்து வந்த இந்த வழக்கில் சார்பு நீதிபதி பர்சத் பேகம் கடந்த மாதம் தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் உதயகுமார், புஷ்பராயன், ஜேசுராஜன் ஆகியோர் விடுவிக்கப்பட்டனர். ஜோதி, ரோசாரி, லூர்து மைக்கேல், போர்ஜின், அசாருதீன், ராபர்ட் சேகர், பிரவீன், ரமேஷ், கவுசானல், கௌதம், சீலன், சகாயம், ஞானபிரகாசி, ஆஷா, சிங், ரவி, ராணி, சூர்யா ஆகியே 18 பேருக்கும் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், தலா ரூ.500 அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து 18 பேரும் பாளை. மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்ட 18 பேரும் தண்டனையை எதிர்த்து நெல்லை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

மனுவை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி சீனிவாசன் விசாரித்து 18 பேரின் 7 ஆண்டு சிறைத் தண்டனையை நிறுத்தி வைத்து உத்தரவிட்டார். மேலும் 18 பேரும் வள்ளியூர் நீதிமன்றதில் ஆஜராகி இருநபர் ஜாமீனிலும், தலா ரூ.10 ஆயிரம் பிணைத் தொகையை செலுத்தி ஜாமீனில் செல்லவும் உத்தரவிட்டார்.

அறந்தாங்கி நடைபயணத்தில் பரபரப்பு

அண்ணாமலை- பொன்.ராதாகிருஷ்ணன் இடையே மோதல்

பிரசார வாகனத்தில் ஏற மறுப்பு

புதுக்கோட்டை, ஆக. 3-

அறந்தாங்கியில் நேற்று இரவு நடந்த நடைபயண பிரசாரத்தில் பாஜக தலைவர் அண்ணாமலை பேசினார். அப்போது அவரது வாகனத்தில் ஏற பொன்.ராதாகிருஷ்ணன் மறுத்து விட்டார்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை என் மண் என் மக்கள் என்ற தலைப்பில் நடைபயணம் மேற்கொண்டு வருகிறார். நேற்று காலை புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் பகுதியில் நடைபயணம் சென்ற அவர் அறந்தாங்கியில் இரவு நடை பயணத்தை நிறைவு செய்தார். பஸ் நிலையம் அருகில் அண்ணாமலை பேசியதாவது:

ஒன்றரை ஆண்டுக்கு முன்பு 10 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என பிரதமர் மோடி கூறி இருந்தார். அதன்படி, இதுவரை 5 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. வரும் டிசம்பருக்குள் 10 லட்சம் பேரும் வேலை வாய்ப்பை பெற்று விடுவர்.

இலங்கைகடல் எல்லை எந்த இடத்தில் இருக்கிறது என்று தெரியாமல் நம் மீனவர்கள் மாட்டிக் கொள்கிறார்கள். எனவே, கச்சத்தீவை இலங்கையிடம் இருந்து மீட்டுத்தர வேண்டும் என்று ஒன்றிய அரசை தமிழக பாஜக தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. அது கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. மேலும், இலங்கையில் சிறை பிடிக்கப்பட்டுள்ள படகுகளை மீட்கவும் ஒன்றிய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்றார்.

அண்ணாமலை பிரசார வாகனத்தில் பேசிக் கொண்டிருந்த போது, அதன் அருகில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் நின்று கொண்டிருந்தார். அவரை பிரசார வாகனத்தில் ஏறுமாறு தொடர்ந்து பாஜக நிர்வாகி கருப்பு முருகானந்தம் அழைத்தபடி இருந்தார். ஆனால் கடைசிவரை வாகனத்தில் பொன்.ராதாகிருஷ்ணன் ஏறவில்லை. நடைபயண பிரசாரத்தில் அண்ணாமலைக்கும், பொன்.ராதாகிருஷ்ணனுக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு விட்டது. இதனால் தான் வாகனத்தில் ஏற பொன்.ராதாகிருஷ்ணன் மறுத்து விட்டார் என்று பாஜ வட்டாரத்தில் கூறப்படுகிறது.

மேலும் அண்ணாமலை பிரசாரம் முடிந்ததும் அறந்தாங்கியில் உள்ள தனியார் ஓட்டலில் தங்குவதாக இருந்தது. ஆனால் திடீரென அவர் காரைக்குடி சென்று தங்கிவிட்டார். அறந்தாங்கி ஓட்டலில் போதிய சொகுசு வசதிகள் இல்லாததால், அண்ணாமலை காரைக்குடிக்கு சென்று விட்டதாகவும் கூறப்படுகிறது.

அறந்தாங்கியில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் எதிர்பார்த்த கூட்டம் இல்லை. சுமார் 300 பேர் மட்டுமே வந்திருந்தனர். மாலை 4 மணிக்கு அண்ணாமலை வருவதாக இருந்தது. ஆனால் இரவு 7.30 மணிக்கு தான் வந்தார். இதனால் பெண்கள், தொண்டர்கள் நீண்ட நேரம் வெயிலில் காத்திருந்தனர்.

அறந்தாங்கி நகராட்சி எல்லையில் இருந்து பஸ் நிலையம் வரை சுமார் 2 கிமீ தூரம் மட்டுமே அண்ணாமலை நடந்தார். அவ்வப்போது வாகனத்தில் ஏறிக்கொண்டார். ஆடம்பர வசதி இல்லாத ஓட்டல்களில் அவர் தங்குவது இல்லை. அண்ணாமலை மேற்கொள்வது நடைபயணமா, சொகுசு பயணமா என தெரியவில்லை என மக்கள் பேசிக்கொண்டனர்

தமிழ்நாடு அரசு
நெடுஞ்சாலைத்துறை
கோயம்புத்தூர் கட்டுமானம் (ம) பராமரிப்பு வட்டம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.15 / 2023-24 / தவஅ / நாள்: 28.07.2023

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, கோயம்புத்தூர் வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி.-2023-24ல் உள்ள **கோயம்புத்தூர் (நெ), க(ம)ப கோட்டம் - 1 பணி, உதகமண்டலம் (நெ), க(ம)ப கோட்டம் - 1 பணி** மற்றும் சிறப்பு பழுதுபார்த்தல் பணிகள் 2023-24ல் **கோயம்புத்தூர் (நெ), க(ம)ப கோட்டம் - 4 பணிகள்** இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **23.08.2023 பிற்பகல் 3.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **05.08.2023 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

செ.ம.தொ.இ./4235/ஒப்பந்தப்புள்ளி/2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்".

கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப கோயமுத்தூர் வட்டம்.

SHRIRAM Finance
SHRIRAM City MONEY WHEN YOU NEED IT MOST

ஸ்ரீராம் நிதி லிமிடெட்

தலைமை அலுவலகம்: நிலை–3, வோக்ஹார்ட் டவர்ஸ், கிழக்கு விங் C–2 பிளாக், பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா (கிழக்கு), மும்பை 400 051; தொலைபேசி: 022 4241 0400, 022 4060 3100; இணையதளம்: http://www.shriramfinance.in
பதிவு அலுவலகம்: ஸ்ரீ டவர்ஸ், மனை எண் 14A, தெற்கு நிலை, தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032
கிளை அலுவலகம்: எண்: 13, 3வது தளம், மீனாட்சி டவர்ஸ், இராஜமன்னார் தெரு, ஜி.என். செட்டி சாலை, தி–நகர், சென்னை–600017

பிற்சேர்க்கை-IV-A [விதி 8(5) & 9(1) விதிமுறையை காண்க] அசையாச் சொத்துகள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

குறிப்பு: சென்னை, NCLT ஆணையின்படி "ஸ்ரீராம் சிட்டி யூனியன் நிதி லிமிடெட்" ஆனது "ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் நிதி லிமிடெட்" உடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து "ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் நிதி லிமிடெட்" பெயரானது 30–11–2022 தேதியிட்ட பெயர் மாற்றம் தொடர்பான கூட்டிணைப்பு சான்றிதழ் மூலம் 30.11.2022 முதல் "ஸ்ரீராம் நிதி லிமிடெட்" ஆக மாற்றப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது ஸ்ரீராம் நிதி லிமிடெட் (முன்னதாக ஸ்ரீராம் சிட்டி யூனியன் பைனான்ஸ் லிமிடெட் ஆக அறியப்பட்டது) வசம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, ஸ்ரீராம் நிதி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் கையக சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும், கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்துகள் ஆனது, அட்டவணையில் குறிப்பிட்டவாறு, கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோரிடமிருந்து ஸ்ரீராம் நிதி லிமிடெடுக்குரிய பாக்கி நிலுவைத்தொகையை மீட்பதற்காக **"உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் 21–ஆகஸ்ட்–2023 11 மணி முதல் பிற்பகல் 01.00 மணிக்குள்** மின்–ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள், நிலுவைத்தொகை, அசையாச் சொத்தின் குறு விவரம் மற்றும் அதற்குரிய தெரிந்த வில்லங்கங்கள், சுவாதீனம் வகை, நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை & உயர்த்தும் தொகை ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர்கள்/உப–கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் பெயர்	13(2) கோரிக்கை அறிவிப்பு நாள் & தொகை	நிர்ணய விலை (₹) & ஏலம் உயர்த்தும் தொகை	முன்வைப்புத்தொகை செலுத்தும் விவரங்கள் (EMD) விவரங்கள்.	ஏலத் தேதி & நேரம்	தொடர்பு நபர் மற்றும் பார்வையிடும் நாள்
1. M/s. ஸ்ரீ சங்கீதா மில்ஸ் பிரதிநிதித்துவம் அதன் பங்குதாரர் திரு. ஆர். கனகராஜ் ... (கடன் வாங்கியவர்) 366/2, காடுவெட்டிபாளையம், கருமத்தம்பட்டி, பல்லடம், கோயம்புத்தூர் 641 659 2. திரு. எம் ரங்கசாமி... (இணை கடன் வாங்குபவர்/ உத்தரவாதம் அளிப்பவர்) 31 A, கணேசபுரம், சோமனூர், சூலூர் தாலுக்கா செம்மாண்டம்பாளையம், சோமனூர், கோயம்புத்தூர் – 641 668 3. திருமதி ஆர் கலாமணி ...(இணை கடன் வாங்குபவர்/ உத்தரவாதம் அளிப்பவர்) 31 A, கணேசபுரம், சோமனூர், சூலூர் தாலுக்கா, செம்மாண்டம்பாளையம், சோமனூர், கோயம்புத்தூர் – 641 668 4. திரு. ஆர் கனகராஜ்... (இணை கடன் வாங்குபவர்/ உத்தரவாததாரர்) 31 A, கணேசபுரம், சோமனூர், சூலூர் தாலுக்கா, செம்மாண்டம்பாளையம், சோமனூர், கோயம்புத்தூர் – 641 668 5. திரு. ஆர். கிருஷ்ணசாமி... (இணை கடன் வாங்குபவர்/ உத்தரவாததாரர்) 4/14 A, கணேசபுரம், சோமனூர், சூலூர் தாலுக்கா, செம்மாண்டம்பாளையம், சோமனூர், கோயம்புத்தூர் – 641 668 6.திரு. கே முத்துசாமி ... (இணை கடன் வாங்குபவர்/ உத்தரவாததாரர்) 4/14 A, கணேசபுரம், சோமனூர், சூலூர் தாலுக்கா, செம்மாண்டம்பாளையம், சோமனூர், கோயம்புத்தூர் – 641 668 6.திருமதி. எம் மகேஸ்வரி... (இணை கடன் வாங்குபவர்/ உத்தரவாதம் அளிப்பவர்) 4/14 A,கணேசபுரம்,சோமனூர்,சூலூர்தாலுக்கா, செம்மாண்டம்பாளையம், சோமனூர், கோயம்புத்தூர் – 641 668 **சுவாதீனம் நாள் & சுவாதீனம் வகை** **23-02-2022 -உடல் உடைமை** **தெரிந்த வில்லங்கங்கள் தெரிந்தவை இல்லை**	ரூ. 17 டிசம்பர் 2021 இன் படி 1,19,81,085/– (ரூபா ஒரு கோடியே பத்தொன்பது இலட்சம் எண்பத்தொரயிரத்து எண்பத்து ஐந்து மட்டும்) கடன் கணக்கு எண். RSTRDTF1803270001 முன் மூடல் தொகை ரூ 1,59,94,978/– (ரூ. ஒரு கோடியே ஐம்பத்தொன்பது இலட்சம் தொண்ணூற்று நான்கு இலட்சம் தொள்ளாயிரத்து எழுபத்தெட்டு 31–07–2023 அன்று மட்டும்)	ரூ. 1,41,57,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தி ஒரு லட்சத்து ஐம்பத்தேழாயிரம் மட்டும்) **ஏல அதிகரிப்பு:** ரூ.1,00,000/– (ரூபா ஒரு லட்சம்) மற்றும் அத்தகைய மடங்குகளில் **முன்வைப்புத்தொகை (EMD) (₹)** ரூ. 14,15,700/– (ரூபாய் பதினான்கு இலட்சம் பதினைந்தாயிரத்து எழுநூறு மட்டும்) சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி EMD: 19 ஆகஸ்ட், 2023 நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை	RTGS/NEFT மூலம் EMD தொகையை டெபாசிட் செய்ய வேண்டும் கணக்கு விவரங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன கீழே ஸ்ரீராமுக்கு ஆதரவாக ஃபைனான்ஸ் லிமிடெட் வங்கி பெயர்– AXIS வங்கி லிமிடெட் கிளை – டாக்டர். ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை வங்கி கணக்கு இல்லை– தற்போதைய கணக்கு எண் . 006010200067449 IFSC குறியீடு– UTIB0000006	21 ஆகஸ்ட் 2023 நேரம்: காலை 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை	திரு ஜீவரத்தினம் +91 98415 68770 திரு. மேத்யூ அருண் +91 9994098638 திரு தேப்ஜோதி ராய் +91 98474 02021 சொத்து ஆய்வு தேதி: –12 ஆகஸ்ட், 2023 நேரம் காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை.

சொத்து விவரம்

கோவை பதிவு மாவட்டம், சூலூர் துணை பதிவு மாவட்டம், பல்லடம் தாலுக்கா, கருமத்தம்பட்டி கிராமம், எஸ்.எப். எண் 485/12 உள்ள ஏக்கர் 4.40 நிலங்கள் பின்வரும் எல்லைகள் மற்றும் அளவீடுகள்:– கிழக்கே: தெற்கிலிருந்து வடக்கு எலச்சிபாளையம் சாலை, மேற்கே: சொத்து மிலிட்டரிக்கு சொந்தமானது, வடக்கே: அரிஜன காலனி, தெற்கே: கிழக்கு மேற்கு சேகுடந்தளி சாலை, இந்த நடுவில் 4.40 ஏக்கர் பரப்பளவில் ஏற்கனவே உள்ளது. விற்கப்பட்டது மற்றும் மீதமுள்ள பரப்பளவு ஏக்கர் 4.30 நிலம், இதில் பொதுவான 1/3 பங்கு
ஏக்கர் 1.43 பரப்பளவு நிலம், சாலைகள் பொதுவான பயன்பாடு மற்றும் பொதுவான பாதைகள் போன்றவற்றை அமைப்பதற்கான உரிமைகளைப் பயன்படுத்துகிறது.
இந்த சொத்து கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது

விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ஸ்ரீராம் நிதி லிமிடெட் இணையதளத்தில் http://www.shriramfinance.in/ கொடுக்கப்பட்ட ஏலம் தொடர்பானவற்றைப் படிக்கவும்.

இடம்: கோயம்பத்தூர்
நாள்: 03–08–2023

ஒம்/– அதிகாரப்பூர்வ அலுவலர்
ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்